அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்** : 72/2017

**தேதி** : 14/08/2017

## சுதந்திர தின விழா வாழ்த்துக்கள்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அவர்களின் அறிக்கை

நமது இந்திய திருநாடு அடைந்த சுதந்திரத்தை மகிழ்ச்சியோடு வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வதில் இருக்கும் உணர்வுகளை, நமக்காக இரத்தம் சிந்தி உயிரிழந்த சுதந்திரப் போராட்ட வீரர்களையும், தற்போது வரை உயிரிழந்துக் கொண்டிருக்கும் இராணுவ வீரர்களையும் நினைவில் கொள்வதில் இந்தியர் என்ற உணர்வு இருக்கவேண்டும்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை மாநில பாகுபாடு பார்க்காமல் நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு அனைத்தையும் பகிர்ந்துக்கொள்ளவேண்டும். உதாரணத்திற்கு தமிழக மீனவர்கள் சிறைப்பிடிப்பு என்று கருதாமல் இந்திய மீனவர்கள் சிறைப்பிடிப்பு என்றே கருதவேண்டும்.

ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சியை பற்றி பேசிக்கொண்டிருப்பதைவிட வளர்ச்சியில்லாத துறை மீது அதிக கவனம் செலுத்தி நமது இந்திய திருநாடு வளர்ச்சியடைய ஊழலை ஒழித்து உலக அளவில் இந்தியா மேலும் முன்னேற அனைவரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும்.

விவசாயிகள், மீனவர்கள், கல்வி, பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு, அடிப்படை தேவைகளோடு நாடு முழுவதும் அமைதி, ஒற்றுமை, சமத்துவம் நிலைத்து சகோதரத்துவம் தழைத்து சாதி, மத, மொழி பேதமற்ற புதிய சமுதாயம் உருவக பாடுபடுவோம். இந்த சுதந்திர திருநாளில் உலகெங்கும் வாழும் இந்தியர்களுக்கு என் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் சுதந்திர தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com